**தலைப்பு 296 – இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகளில் 10 செலவு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 22,770,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் இருந்து உண்மைச் செலவு ரூபா 21,008,156 தொகை ஆகக் காணப்பட்டமையால் அந்த 10 செலவினங்கள் தொடர்பாக 5 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உங்கள் அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | யதார்த்த அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவு விடய இலக்கம் 1402 இன் ஆரம்ப மதிப்பீடு ரூபா 1,600,000 தொகை எனினும், திருத்திய செலவு மதிப்பீடு 2,050,000 தொகை ஆகக் காணப்பட்டமையால், ரூபா 450,000 இற்கான முரணொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது ஆரம்ப மதிப்பீட்டின் 28 சதவீதம் ஆகும். | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக செலாவணி விகிதாசாரத்தில் அதிகரிப்பினை கட்டுப்படுத்துவதற்காக திட்டமிடப்படாத வர்த்தமானிகள் வெளியிடுவதற்கு நேரிட்டிருந்தது. இவ்வாறான செலவுகள் கடந்த ஆண்டுகளின் போது மேற்கொள்வதற்கு நேரிட்டிருக்காததுடன், கடந்த ஆண்டுகளின் போது செலவுகள் தொடர்பாக மீளாய்வு செய்வதன் மூலம் செலவுகளை எதிர்வு கூறுவதற்கு முடியாமல் இருந்தது. | ஆரம்ப மதிப்பீடுகள் தயாரிக்கும் போது கடந்த ஆண்டுகளின் செலவுகள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு யதார்த்த அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது 04 மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக தேறிய ஏற்பாடுகளின் | உங்கள் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | யதார்த்த அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 1,310,000 தொகை எனினும், அந்த 04 செலவு விடயங்களின் உண்மைச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 938,410 தொகையாக காணப்பட்டமையால், 9 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான இரண்டு செலவு விடயங்களின் ஏற்பாடுகள் நி.பி. 66/99 வீரமொன் நடைமுறை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த இரண்டு செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,100,000 தொகையாக காணப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டின் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 3,335,000 தொகைக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு இடையே வித்தியாசம் சதவீதப்படி 59 சதவீதம் ஆகும். | இறக்குமதி 296-01-01-2102 மற்றும் ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் நிகழ்வுநிலை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் கணினி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக இந்த செலவு விடயத்தின் செலவுகள் அதிகரித்திருந்தமையால் இந்த செலவு விடயத்தின் ஏற்பாடுகளை அதிகரிப்பதற்கு நேரிட்டிருந்தது. 296-01-01-2401 கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல் வரையறுக்கப்பட்டு இருந்தமையால் இந்த செலவு விடயங்களின் செலவுகள் குறைந்திருந்தமையால் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதுடன், அந்த சேமிப்புக்களை ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாத 296-01-01-2102 செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டது. | ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது கடந்த ஆண்டுகளின் செலவுகள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு கூடியளவு சரியான செலவு மதிப்பீடுகளை எதிர்வுகூறல் மேற்கொண்டு யதார்த்த அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை ஆக்கபூரவமானதாக ஆக்குவதற்காக இடையிடையே பதவியணி கூட்டங்களில் முன்னேற்றங்களை கலந்துரையாடி அவற்றிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அக் கலந்துரையாடல்களின் போது இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டில் பலவீனம் அடையக் கூடிய இடங்களை வலுப்படுத்துவதற்காக இலக்கம் 2018/01, 2018/02, 2018/03, 2018/04, 2019/01, 2019/02, 2019/03, 2019/04, 2020/01, 2020/02, 2020/03, 2020/04, 2020/05, 2020/06, 2020/07, 2020/08, 2020/09, 2020/10, 2020/11, 2020/12, 2020/13, 2020/14 2021/01, 2021/02, 2021/03 மற்றும் 2021/04 கொண்ட உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 1978 இன் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11 E | நியமத்திற்கு முரணாக இறக்குமதிகள் மேற்கொள்ளும் இறக்குமதியாளர்களை வர்த்தமானி ஒன்றின் மூலம் வெளியிடப்பட வேண்டி இருந்த போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | இதற்கு தேவையான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது இந்த வர்த்தமானி அறிவித்தலில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக திணைக்கள அதிகாரிகளுடன் மேலும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. | 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11 E பிரிவின் பிரகாரம் இறக்குமதிகள் மேற்கொள்ளும் இறக்குமதியாளர் களின் விபரங்கள் வர்த்தமானி ஒன்றின் மூலம் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 891(1) | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று அகர வரிசை அடிப்படையில் தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டு சென்றிருக்கவில்லை. | உங்கள் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திணைக்களத்தினால் அவ்வாறான பதிவேடோன்று தயாரிப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2014 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 | அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலவரையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடிய பின்னர் அல்லது ஆகிய விடயங்களில் ஆரம்பத்தில் வரக் கூடிய சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் 07 வாகனங்களில் 06 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | உங்கள் அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். 30/2016 சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் ஏனைய 06 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வு ஐய வினாவின் படி எரிபொருள் பரிசோதனை குறிப்பிட்ட முறைப்படி பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென மேலும் அறிவிக்கின்றேன். | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எதிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 04 திகதிய 07/2019 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கை | அனைத்து அத்தியவசியம் அல்லாத மற்றும் முக்கியத்துவம் குறைந்த செலவுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன், அலுவல உபகரணங்கள் கொள்வனவு செய்தல் முக்கியத்துவம் குறைந்த செலவு என கணிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது 2102 இலக்கம் கொண்ட தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் செலவு விடயத்தின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 3,006,850 தொகைக்காக சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 296-01-01-2102 செலவு விடயத்தில் மொத்தச் செலவு ரூபா 3,163,351 தொகை ஆக திருத்தப்பட வேண்டியதுடன், கொவிட்-19 தொற்றுநோய் சந்தர்ப்பத்திலும் கூட திணைக்களம் சார் சேவை இடையராது நடாத்தப்பட்டது. அந்த சேவைகள் கொவிட் - 19 வழிகாட்டலின் கீழ் மிகவும் செயற்திறனுடன் நடாத்துவதற்காக இந்த செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | மேற்கூறிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பாக ரூபா 335,753 ற்கான கடன்மீதியொன்று மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த திரு ஆர்.டீ.எம். ஜயவிக்ரம அவர்களுக்கு பொது நிருவாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கியிருந்த குற்றப்பத்திரம் இத் திணைக்களத்தினால் 2019 ஆகஸ்ட் 26 திகதி அவருக்கு பதிவுப் தபால் மூலம் அனுப்பப்பட்டதுடன், உத்தியோத்தருக்கு அனுப்பப்பட்ட குற்றப்பத்திரம் திணைக்களத்திற்கு மீண்டும் கிடைத்திருக்கவில்லை.<br>மேலும், அவர் இது வரை எதுவித அறிவிப்பும் மேற்கொண்டிருக்கவில்லை என கருணையுடன் அறிவித்துக்கொள்கின்றேன்.<br>இது தொடர்பாக IECD/8/2/15 மற்றும் 2019.10.15 திகதிய கடிதத்தின் மூலம் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டதாக மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். | பெறவேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நோக்கு மற்றும் பணிகள்

திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த ஆனால் நிறைவேற்றப்பட்டிருக்காத விடயங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1969 ஜனவரி 16 திகதிய 1969 இன் 01 இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் கீழ் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டதன் குறிக்கோள், நோக்கு மற்றும் பணிகளின் படி இலங்கை பொருளாதாரத்திற்கு கேடான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், தற்போது ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாக நிருவனங்களினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் அடிப்படை மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதனால் இந்த திணைக்களம் நிறுவப்பட்ட அடிப்படை குறிக்கோள் நிறைவேற்றும் விதமாக செயற்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான முறைமை ஒன்று அல்லது நடைமுறை ஒன்று காணப்படவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்படுவதுடன், அனுமதிப்பத்திர கட்டண அறவீடுகள் மாத்திரம் பிரதான கருமம் என செயற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 1969 இன் 01 இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் பிரகாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஜெனராலுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இத்திணைக்களத்தின் குறிக்கோள், நோக்கு மற்றும் பணிகளின் படி இலங்கை பொருளாதாரத்திற்கு கேடான முறையில் தாக்கக் ஏற்படுத்தக் கூடிய இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையாக நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி 2020 ஆண்டின் போது, ஏற்பட்டிருந்த தொற்றுநோய் நிலைமையில் இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் சில விடயங்களினை இறக்குமதியை தடை செய்து, சில விடயங்களின் இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி மற்றும் சில விடயங்களை இறக்குமதியினை | 1969 இன் 01 இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் கீழ் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டதன் குறிக்கோள், நோக்கு மற்றும் பணிகளின் படி இலங்கை பொருளாதாரத்திற்கு கேடான முறையில் தாக்கக் கூடிய இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வரையறுத்து 11 தொகை வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. | |

### 3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மென்பொருள் அபிவிருத்திக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் மென்பொருள் முறைமையினை தொடர்புபடுத்துதல், வளையமைப்புக்கு உட்படுத்தல் மற்றும் வளையமைப்பு சார் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வதற்காக ICTA நிறுவனத்துடன் 2017 பெப்ரவரி 03 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கையொப்பமிட்டிருந்ததுடன், அதன்படி நிதி வழங்குதல் ICTA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இதற்காக ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலமும் 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை ரூபா 9,080,000 தொகை பெற்றிருந்ததுடன், அவற்றில் ரூபா 8,119,035 செலவிடப்பட்டிருந்தது. எனினும், இச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017 ஆண்டின் போது தகவல் மற்றும் தொழிநுட்ப முகவராண்மை நிலையத்தின் (ICTA) மூலம் மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக நிதியம் வழங்கப்படும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்காத விதமாக ICTA நிறுவனத்தினால் திட்டமிடப்பட்ட மென்பொருள் முறைமையை இணங்கிய முறையில் தயாரித்துக் கொடுப்பதற்கு இயலாது இருந்தது. இது தொடர்பாக தொடர்ச்சியாக கோரிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரை பூர்த்தி செய்து கொடுத்திருக்கவில்லை. 2018 ஆண்டின் போது முதல் கட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் அதில் காணப்பட்ட | திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட தினத்தில் கருமத்தை நிறைவேற்றுக் கொள்வதற்காக செயற்திறனுடன் செயற்பட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குறைபாடுகளை மீண்டும் தயாரித்துக் கொடுப்பதற்காக அவர்களுக்கு இயலாமையினால் அதனை செயற்படுத்த முடியாமல் போனது.

திணைக்களத்தில் தற்போது காணப்படும் கணினி முறைமைக்கு நிகழ்வு நிலையில் விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு மற்றும் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு இயலுமான விதமாக அபிவிருத்தி செய்வதற்கு திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அதன் காரணமாக, 2020 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி அவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது நிகழ்வு நிலையில் விண்ணப்பங்கள் மற்றும் வரவுப்பத்திரம் அனுப்புவதற்கான வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோல் நிகழ்வு நிலை கொடுப்பனவு மேற்கொள்ளும் வசதிகள் பரிசோதனை (Testing) மட்டத்தில் காணப்படுவதுடன், அதனையும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் போது பேரேட்டின் படி இறுதி இருப்பு மீதி மற்றும் பௌதீக பண்ட மீதியிடையே 53 விடயங்களில் மிகைகளும் 30 விடயங்களில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன. அதனால் திணைக்களத்தின் இருப்புக் கட்டுப்பாடு பலவீன மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | பண்டக் கணிப்பீட்டு பதிவேடு சரி செய்யப்பட்டது. மிகைகளை பண்டப் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பண்டக் கணிப்பீட்டுச் சந்தர்ப்பத்தின் போது கண்டுபிடிக்க முடியாமல் காணப்பட்ட ஆனால் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் கணிப்பீட்டு சபையொன்றின் மூலம் மீண்டும் கணிப்பீடு ஒன்றிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கணிப்பீட்டுச் சபையின் தீர்மானத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக் கட்டுப்பாடு செயற்திறனுடன் மற்றும் வினைத்திறனுடன் பேணப்பட்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கங் கொண்ட நிதியமைச்சுச் சுற்றறிக்கையின் பந்தி 9.3 இன் பிரகாரம் அனைத்துத் திணைக்களத் தலைவர்களினாலும் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை | உள்ளகச் சுற்றறிக்கைகளின் மூலம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு பிணை வைக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கங் கொண்ட நிதியமைச்சுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வைக்கப்படுவதை பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், திணைக்களத்தினால் அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் தொடர்பான இச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறக்குமதிகளை வரையறுக்கப்பட வேண்டிய மற்றும் தடைசெய்யப்பட வேண்டிய பண்டங்களை இறக்குமதி செய்வதை தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் அடங்கிய 2044/40 இலக்க மற்றும் 2017 நவம்பர் 09 திகதிய வர்த்தமானி மூலம் பழைய வாகனங்கள் நாட்டிற்குள் வருவதை வரையறுப்பதற்கான 2016 ஜூன் 14 திகதிய 1971/10 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் சட்டவிரோத இறக்குமதிகள் நாட்டினுள் வருவது தவிர்க்கப்பட்டிருந்தது. எனினும் சுங்கத் திணைக்களம் இடையே தொடர்பு காணப்படாமை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படும் பலவீனங்கள் காரணமாக இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்னர் அது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை முறைமை ஒன்று திணைக்களத்தில் காணப்படவில்லை. | உங்கள் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன்.<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்னர் அது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை எடுப்பதற்காக பொருத்தமான நடைமுறை ஒன்று சுங்கத் திணைக்களம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் இந்தத் திணைக்களம், ஒன்றிக்கப்பட்டு அதன் மூலம் அவ்வவ் நிறுவனங்களிடையே இடைதொடர்பு பேணப்படுவதற்கான தகவல் முறைமை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தரவுகளை பரிமாரிக் கொள்வதற்கு தேவையான வசதிகள் | அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறை வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்னர் அது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை நடைமுறையொன்று நிறுவுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

வழங்கப்படுவதனால் போலி ஆவணங்கள் சமர்ப்பித்தலை தவிர்த்துக்கொள்ளக் முடியுமாகும்.

(ஆ) பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல்

(i) 2015 செப்தெம்பர் 21 திகதிய 1933/13 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கு அமைய அனுமதிப்பத்திரம் கட்டுப்படுத்தப்பட்ட வாகனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு மற்றும் அபிவிருத்தி திட்டமுறைமை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு புறம்பாக 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 35 மோட்டார் கார் வண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அவற்றில் சுங்க ஒருங்கிணைப்பு வகைப்படுத்தல் இலக்கம் 8703.22.69 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட வேண்டிய 03 வருடங்களை விட பழைமை வாய்ந்த Mazda Rx8 பெட்ரோல் மோட்டார் வாகனங்கள் (1300 CC) 33 தொகை சுங்க ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் இலக்கம் 8703.90.99 இன் கீழ்

(i) (ii) இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் கி.கா.க. பெறுமதி மீது அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அரசுக்கு அறவிடப்பட வேண்டிய மேலதிக கட்டணம் குறைவாக அறவிடப்பட்டுள்ளது என கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளுமாறு குற்றவியல் விசாரணை பணிப்பாளருக்கு 2021.05.03 திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டது.

வாகனங்கள் இறக்குமதி செய்யும் போது வர்த்தமானி அறிவித்தல்களுக்கு மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்படும் அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| இறக்குமதி செய்யப்படல் காரணத்தினால் ரூபா 114.6 மில்லியனுக்கான சுங்க வரி இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) 2016 பெப்ரவரி 11 திகதிய 1953/28 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் வாகன அனுமதிப்பத்திரம் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட காலத்தை மிகைத்து 5 வருடங்கள் வரையான வாகனங்களுக்காக கி.கா.க பெறுமதியின் 15 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் என அறவிடப்பட வேண்டியதுடன், அனுமதிப்பத்திர பெறுமதியை மிகைத்து இறக்குமதி செய்தமையால் கி.கா.க பெறுமதியின் 3 சதவீதத்திற்கான மிகைக் கட்டணம் ஒன்றும் அறவீடு செய்யப்பட வேண்டும். அதன் படி இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் கி.கா.க. பெறுமதியின் மீது அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 20,404,375 தொகை மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 3,509,045 தொகை என மொத்தக் கூட்டுத் தொகை ரூபா 23,913,420 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | வாகனங்கள் இறக்குமதி செய்யும் போது வர்த்தமானி அறிவித்தல்களுக்கு மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்படும் அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (iii) 2017 ஆகஸ்ட் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் போது இரண்டு இறக்குமதியாளர்கள் தொடர்பாக 06 சுங்கப் பதிவுகளுக்காக வரவு அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | சுங்க குறிப்புக்கள் தொடர்பாக வரவு அறிவித்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 111 தொகை காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 79 தொகையாக காணப்பட்டமையால் 32 வெற்றிடங்கள் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொகுதிக்காக ரூபா 49 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் படி தனி நபருக்கான செலவு ரூபா 0.62 மில்லியன் தொகையாக இருந்தது. | உங்கள் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்புக்காக அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு 2021-01-21 மற்றும் 2021-01-30 திகதி ஆகிய தினங்களில் வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டதுடன் தற்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மேலும் அறிவிக்கின்றேன். | திணைக்களத்தின் வினைதிறனை அபிவிருத்தி செய்வதற்காக நிலவும் அத்தியவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |